# கொழும்புப் பல்கலைக்கழகம், இலங்கை

## சட்ட பீடம்

## சட்டமாணிப் பரீட்சை, வருடம் IV - 2019/2020

## மனித உரிமைகள் சட்டம்

(மூன்று மணித்தியாலங்கள்)

வினாக்களின் மொத்த எண்ணிக்கை: 07

நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

(தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்)

---

1. "1948ஆம் ஆண்டின் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனமானது (UDHR) ஆக்கப்பட்டதிலிருந்து, மனித உரிமைகள் கருத்தேற்பினது ஊக்கமிகு தன்மையானது அதன் பரிணாம வளர்ச்சியினூடாகத் தெளிவாகத் தெரிகின்றது. மனித உரிமைகள் அக்கறைகளினது வேறுபட்ட பரப்புக்களை நோக்கி எடுக்கப்படுகின்ற குறித்துரை பொருள்சார் அணுகுமுறையானது (*Thematic Approach*) அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனத்தை வரைந்தவர்களினால் ஒருபோதும் எண்ணப்படவில்லை என்பது அத்தகைய வளர்ச்சியின் குறிப்பிடத்தக்கதொரு சிறப்பம்சமாகும்."

   அண்மைக்காலத்தில் ஐக்கிய நாடுகள் அமைப்பானது கவனஞ்செலுத்தியுள்ள அத்தகைய மனித உரிமைகள் அக்கறைகளில் ஒன்றினை இனங்காண்பதுடன், அதே மனித உரிமைகள் தொகுதியினை முன்னேற்றுவதில் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அங்கத்தவர்களின் மறுமொழியினையும் ஆராய்க.

2. "சட்டத்தின் முன்பு சமத்துவமாகவும் சட்டத்தினால் சமமாகப் பாதுகாக்கப்படுவதற்குமான உரிமை என்பது, வேறுபாடான நடாத்துகை அனைத்தையும் பாரபட்சமானதாக ஆக்காது."

   மேலுள்ள இக்கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? உள்நாட்டு மற்றும் சர்வதேச தீர்ப்புச் சட்ட அதிகார ஆதாரங்களுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி உமது விடையினை ஆதாரப்படுத்துக.

3. பார்ம்லாந்து என்ற நாட்டின் குடியிருப்பாளனொருவனான சுனில் என்பவன், சட்டவிரோத மதுபானம் விற்பனை செய்தான் என்ற சந்தேகத்தின் பேரில் 2019ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31ஆம் திகதியன்று பொலிஸாரினது கட்டுக்காவலுக்குள் கொண்டுவரப்பட்டான். அக்குற்றச் சாட்டுக்களை சுனில் மறுத்துவாதிட்டபோது, அவன் கண்கள் கட்டப்பட்ட நிலையில் பொலிஸ் ஜீப் வண்டிக்குள் தள்ளிவிடப்படுகின்றான். அவனுடைய மனைவியான மதாரா என்பவள், பிடிவிராந்தினைக் காண்பிக்குமாறு பொலிஸாரிடம் கோரியபோது, அவள் அப்பால் தள்ளிவிடப்படுகின்றாள். பொலிஸ் நிலையத்தில், ஆடை அகற்றுவிக்கப்பட்ட சுனில், கோலொன்றில் கட்டிவைக்கப்படுவதுடன், பொலிஸ் பரிசோதகரான சந்து (Sandu) என்பவன் முன்னிலையில் உதவிப் பொலிஸ் பரிசோதகாரான பந்து (Bandu) என்பவனால் குழாயொன்றினாலும் கைத்தடிகளினாலும் அடிக்கப்படுகின்றான். புலன்விசாரணையின் போது, உடல்ரீதியான கடுமையான சித்திரவதைக்கு அவன் உள்ளாவதுடன், அதன் காரணமாக அவனுடைய மூக்கிலிருந்து இரத்தப்பெருக்கு ஏற்பட்டு, தாமாக நடமாட முடியாதவனாக அவன் உள்ளான். மறுநாள் காலையில், தனியார் மருத்துவமனையொன்றில் அவன் அனுமதிக்கப்படுகின்றான். அவனுடைய தலையிலுள்ள காயத்துக்கு ஆறு தையல்கள் போடவேண்டியுள்ளதுடன், அவனுடைய உள்ளக உறுப்புக்கள் கடுமையாக குலைவுற்றமையினை அறிகுறிகள் வெளிக்காட்டுகின்றன. மருத்துவ அதிகாரிக்கு எதனையும் வெளிப்படுத்தக் கூடாது என்று பொலிஸ் பரிசோதகரான சந்து அவனை அச்சுறுத்துகின்றார். சுனிலினது உடல்நிலையானது செயலின்மைக் (*Coma*) கட்டத்தை நோக்கி மோசமடைந்து செல்கின்றது. அவனுடைய மூளையின் உயிர்மங்கள் கடுமையாகச் சேதமடைந்துள்ளதாக மருத்துவ அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டவர்களைப் பாதுகாப்பதற்கான அரசுசாரா நிறுவன மொன்றினைச் சேர்ந்த வழக்கறிஞரொருவராக நீர் உள்ளீர். பார்ம்லாந்துவினது சட்டமுறைமையானது இலங்கையினதைப் போன்றதெனக் கருதிக்கொள்க. இலங்கையிலுள்ள உரிமைகள் சட்டப்பரப்பிற்குள் சுனிலுக்கு கிடைக்கக்கூடியதான சட்ட நிவாரணங்கள் உள்ளனவா என்பது பற்றி மதாராவுக்கு ஆலோசனை கூறுக.

4. ஷோபார் என்பவன் கீர்த்திபெற்ற சுதந்திர சிந்தனையாளன் ஒருவனும், ஐக்கிய மாக்கோனிய அரசுகள் என்ற நாட்டிலிருந்துவந்த புகலிடக்கோரிக்கையாளன் ஒருவனுமாவான் என்பதுடன், அவனுடைய புகலிடக்கோரிக்கை வெற்றியடையாததன் காரணமாக அவன் சுவாக்கிலாந்து என்ற நாட்டின் சமஷ்டி எல்லை முகவரகத்தினால் (*Federal Boarder Agency of Swakiland*) அரச தடுப்பு நிலையத்தில் தடுத்துவைக்கப்பட்டுள்ளான். பெருந்தொற்று நோயான கோவிட் 19 தொற்றுள்ளவர்கள் என்று சந்தேகிக்கப்படுகின்றவர்களான சட்டவிரோத குடியேறிகளான ஏனையவர்களுடன் ஷோபாரையும் சேர்த்து உடனடியான வெளியேற்றுவதற்குள்ள விருப்பத்தேர்வுபற்றி சுவாக்கிலாந்தின் சமஷ்டி எல்லை முகவரகமானது ஆராய்கின்றது.

எந்தவொரு மருத்துவ பரிசோதனைகளையும் மேற்கொள்ளாது குடியேறிகளை பல்வேறுநாடுகளுக்கும் திருப்பியனுப்புவதனை சுவாக்கிலாந்துவினது சமஷ்டி எல்லை முகவரகம் மற்றும் சுகாதார அதிகாரசபை என்பன மேற்கொள்கின்றன. அரசின் மதத்துக்கு எதிரான சுதந்திர சிந்தனையைப் போதித்தமைக்காக ஷோபாருக்கும் அவரைப் பின்பற்றுபவர்களுக்கும் மாக்கோனிய அதியுயர் சமயப் பேரவையானது ஏற்கனவே மரண தண்டனையை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளனர். அதனிடையே, கோவிட் 19 வைரசின் சமூகப் பரம்பலைக் கட்டுப்படுத்துவதற்கு மாக்கோனியா தவறியிருப்பதாகவும், கோவிட் 19 வைரஸினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது அதிகரித்துச்செல்வதனால் மாக்கோனியாவின் நிலைமை நாளுக்கு நாள் படுமோசமடைந்து செல்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சுவாக்கிலாந்தும் மாக்கோனியாவும் சர்வதேச மனித உரிமைகளின் பிரதான ஆவணங்கள் அனைத்துக்கும் அரசதரப்பினராவர். அவர்களின் அரசியலமைப்புக்களும் இலங்கையின் அரசியலமைப்பினைப் போன்றதே என்று கருதிக்கொள்க.

பின்வருவனவற்றுக்கு விடை தருக:

அ) சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகளின் பின்னணியில், சுவாக்கிலாந்துவில் ஷோபாரின் புகலிடக் கோரிக்கை தொடர்பாக சுவாக்கிலாந்துவுக்கு ஆலோசனை கூறுக.

ஆ) சுவாக்கிலாந்துவில் ஷோபார் ஒரு சட்டவிரோத குடியேற்றவாசியாக இருப்பின், உமது அபிப்பிராயம் என்ன?

இ) சர்வதேச மனித உரிமைகளின் பிரதான ஆவணங்களுக்கு சுவாக்கிலாந்து ஓர் அரச தரப்பாக இல்லாதுவிடின், உமது விடை வேறுபடுமா?

5. (அ) மற்றும் (ஆ) ஆகிய இரண்டிற்கும் விடை தருக:

**(அ)** சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின்கீழ் முழுமையான சட்ட அங்கீகாரத்துக்கான உரிமையினைப் பெண்கள் கொண்டிருப்பதுடன், ஆண்களுடன் சமமான அடிப்படையில் அவர்கள் நடாத்தப்படவும் வேண்டும். ஆயினும், உலகின் பெரும்பாலான பெண்கள் நிலையுறுதியற்ற சூழ்நிலையில் வாழுகின்றமை, அவர்களின் பெரும்பாலான மனித உரிமைகளை அவர்கள் அனுபவிப்பதனை மருட்சியானதாக ஆக்குவதுடன், உள்நாட்டு அதிகார அமைப்புக்கள் மற்றும் சர்வதேசக் கண்காணிப்பு நிறுவனங்கள் ஆகிய இரண்டிற்கும் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்தல் தொடர்பில் மிகவும் விசேடமான உயர்ந்ததொரு பொறுப்புடைமை ஒன்றினை அது வழங்குகின்றது.

முரண்பாட்டுக்குப் பிந்திய சமூகங்களுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றினை ஆராய்க. பொருத்தமான அதிகார ஆதாரங்களினால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(ஆ) ஒவ்வோர் அரசினதும் கல்விக்கொள்கைக்கிணங்க, பாடசாலைகளைப் பராமரித்து வருகின்றமையுட்பட, தமது சொந்த கல்விசார் நடவடிக்கைகளையும், தமது சொந்த மொழியினைப் பயன்படுத்துதல் அல்லது போதித்தல் என்பவற்றை தேசிய சிறுபான்மை இனத்தின் உறுப்பினர்கள் கொண்டுள்ளனர் (கல்வியில் பாரபட்சங்காட்டுவதற்கு எதிரான யுனஸ்கோ சமவாயம் - 1960).

பன்மைத்துவ நாடொன்றில் உள்ளடக்கிக்கொள்ளும் கல்விக் கொள்கை என்பதுடன் விசேடமாகத் தொடர்புபடுத்தி மேலுள்ள கூற்றின் மீது கருத்துரை செய்க.

6. சுவர்மா என்ற நாட்டின் அதிகார அமைப்புக்களினால் எடுக்கப்பட்டுள்ள பின்வரும் தீர்மானங்கள் தொடர்பாக றைட்-வொய்ஸ் என்ற இயக்கத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் உமது ஆலோசனையினை நாடுகின்றார்:

அ) சமயமொன்றின் தூதுவர் ஒருவரின் குடும்பக் கதையினை அடிப்படையாகக் கொண்டு திரு. தோப்பாராயா என்பவரினால் தயாரிக்கப்பட்ட *"த லாஸ்ட் டெம்டேசன் ஒப் மெசன்ஜர்"* என்ற தலைப்பைக் கொண்ட திரைப்படத்தை இருபது வயதுக்கு மேற்பட்ட பார்வையாளருக்கும் தெரிவுசெய்யப்பட்ட திரையரங்குகளில் மாத்திரம் திரையிடப் படலாம் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில் சுவர்மாவினது தேசிய தணிக்கைச் சபையினால் அனுமதிக்கப்பட்டுள்ளது;

ஆ) ஆரம்பப் பாடசாலைகள் மற்றும் இடைநிலைப் பாடசாலைகள் என்பவற்றில் ஒருங்கிணைக்கப்பட்டதும் கட்டாயமானதுமான பால்சார் கல்வியை அறிமுகஞ்செய்வதற்காக இரண்டு சமூகவியல் கல்விசார்நிபுணர் குழுக்களினால் செய்யப்பட்டுள்ள பரிந்துரைகள் சுவர்மாவினது தேசிய கல்வி ஆணைக்குழுவினால் நிராகரிக்கப்பட்டுள்ளன;

இ) செய்தித்தாள்களில் அரசியல் கேலிச் சித்திரங்களைப் பிரசுரித்தலை, ஒழுங்குவிதியொன்றை ஆக்கியதன் மூலமாக சுவர்மாவினது உள்நாட்டு விவகாரத் திணைக்களத்தினால் தடைசெய்யப்பட்டுள்ளதுடன், இந்த ஒழுங்குவிதியின் ஏதேனும் மீறலானது சகித்துக்கொள்ளப்படமாட்டாது என்பதுடன் அவசியமான சட்ட நடவடிக்கைளும் எடுக்கப்படும் ;

ஈ) சுவர்மாவின் பாதுகாப்பு அமைச்சினால் முன்மொழியப்பட்டுள்ளதான, நாட்டில் *"ஒரு சமூகம் மற்றும் ஒருசீரான சமூக ஒழுங்கு"* என்றறியப்படுகின்ற கொள்கை விதந்துரைக்கப்பட்டுள்ளதுடன், ஏதேனும் நோக்கத்துக்காக பொதுமக்கள் ஒன்றுகூடுதல், பொதுமக்கள் செயற்பாட்டுச் சங்கங்களை உருவாக்குதல், ஒருவருடைய சொந்த கலாசாரத்தைவிட மற்றொருவருடையதை மேம்படுத்துதல், மற்றும் பாதுகாக்கப்பட்ட கலாசார மரபுரிமை அமைவிடங்களை அணுகுதல் ஏன்பன மறுஅறிவித்தல் வரை தடைசெய்யப்பட்டுள்ளன.

*தொடர்ச்சி மறுபக்கத்தில்...*

சுவர்மாவினது சட்ட முறைமையானது இலங்கையினது சட்ட முறைமையினைதைப் போன்றது என்று கருதிக்கொள்வதுடன், மேலுள்ள நிலைமைகளை மதிப்பீடு செய்து, உமது ஆலோசனை அறிக்கையினைத் தயார் செய்க.

7. மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளரின் வருடாந்த அறிக்கை மற்றும் அவருடைய COVID-19 தொடர்பான வாய்மொழியிலான மேம்படுத்தலின் மீதான ஊடாடு கலந்துரையாடலில் (*Interactive Dialogue*), மனித உரிமைகள் பேரவையினது "இலங்கை தொடர்பான உள்மையக்குழு" (*Core Group*) தெரிவித்துள்ள கருத்துக்களுக்கு இலங்கை செய்த கூற்றானது, மனித உரிமைகள் பேரவையின் 44வது அமர்வின்போது கவனத்திற் கொள்ளப்பட்டது; *மற்றவைக்கிடையில்,*

"இலங்கை மீதான தீர்மானம் 30/1 தொடர்பான உள்மையக்குழுவினால் (ஐக்கிய இராச்சியம், கனடா, ஜேர்மனி, வடமெஸிடோனியா மற்றும் மொன்டினிக்ரோ) 2020ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30ஆம் திகதியன்று தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தொடர்பில், தீர்மானம் 30/1 இனது இணை-அனுசரணையிலிருந்து அது தன்னை மீளளழைத்துக் கொள்கின்றதாயினும், மீளிணக்கத்தை அடைந்துகொள்ளுதல், பொறுப்புக் கூறுதல் மற்றும் மனித உரிமைகள் என்பவற்றுக்கு இலங்கையின் அரசியலமைப்பு உருவரைக் கட்டமைப்பினுள், உள்நாட்டில் வடிவமைக்கப்பட்டதும் நிறைவேற்றப்பட்டதுமான செயன்முறை ஒன்றினூடாக அரசாங்கத்தின் கொள்கை உருவரைக்கட்டமைப்புக்கமைவாக தான் அர்ப்பணிப்புடன் இருப்பதாக இலங்கை அரசாங்கமானது தெளிவுபடுத்தியுள்ளது."

அரசுகளினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மனித உரிமைகள் கடப்பாடுகள், மற்றும் அரச இறைமை அத்துமீறப்படாமை மற்றும் ஆள்புல ஒழுங்கு ஆகிய வாதங்களின் பின்னணியில் இலங்கையினது மேலுள்ள கூற்றை ஆராய்க.

தீர்ப்புச் சட்டம் மற்றும் கல்வியியல் அதிகார ஆதாரங்களால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

**********************